உங்கள் இல்லங்களில்
நடைபெறும் மங்களகர
வைபவங்கள் அனைத்தையும்
சிறந்த முறையில்
வீடியோ படம் பிடித்திட
திரு வீடியோ விஷன்
முத்தவிநாயகர் கோயிலடி
கரணவாய் தெற்கு
கரவெட்டி
(33073)

பக்கங்கள் : நான்கு
Registered as a Newspaper

உதயன்

விலை
ரூபா
5-00

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 புரட்டாதி 17 திங்கட்கிழமை (03 10 – 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 310

அனைத்து மங்களகர
வைபவங்களையும் சிறந்த
முறையில்
ஸ்ரில் போட்டோ பிடித்திட
திரு வீடியோ விஷன்
முத்தவிநாயகர் கோயிலடி
கரணவாய் தெற்கு
கரவெட்டி
(33708)

யாழ். பிராந்தியம் மீதான பெரும் தாக்குதல் திட்டம்
பேச்சுக்காக இடை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாம்!

வரிசையாக 6 ஜெனரேட்டர்கள் தயார்!

6 வாரங்களில் யாழ் நகருக்கு மின் விநியோகம் தருவோம்

அமைச்சர் ரத்வத்தை அறிவிப்பு

கொழும்பு, ஒக். 3

அடுத்த ஆறு வாரங்களில் யாழ். நகருக்கு மின்விநியோகம் வழங்கக் கூடியதாக இருக்கும்.

அமைச்சர் ரத்வத்தை முன்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ். குடாநாட்டுக்கு மீண்டும் மின்சாரம் வழங்கும் முயற்சியில் அரசு தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றது. அங்கு கொண்டு செல்லப்படுவதற்காக ஆறு ஜெனரேற்றர்கள் வரிசையாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார். (உ-எ)

ஜனாதிபதித் தேர்தலின் பின்

பெப்ரவரியில் பொதுத் தேர்தல்

கொழும்பு, ஒக். 3

ஜனாதிபதித் தேர்தலைத் தொடர்ந்து பெப்ரவரியில் நாடாளுமன்ற பொதுத் தேர்தலை நடத்த அரசு உத்தேசித்துள்ளது.

தகவல், ஒலிபரப்பு உல்லாசப் பிரயாண, விமான போக்குவரத்து அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா மேற்கண்ட தகவலைத் தெரிவித்துள்ளார்.

பொதுத் தேர்தலையடுத்து மாகாண சபைகள், பிரதேச சபைகள் ஆகியவற்றுக்கான தேர்தல்களையும் நடத்த அரசு திட்டமிட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

கேகாலை கச்சேரியில் நடந்த கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். [உ-3]

8,000 பரல் ம.எண்ணெய் 10,000 பைக்கெட் சிமெந்து

'மாஹோ' மூலம் மாதாந்தம் வரும்

யாழ்ப்பாணம், ஒக் 3

மாதாந்தம் வடபகுதிக்குரிய 8 ஆயிரம் பரல் மண்ணெண்ணெய்யை மாஹோ 'கப்பல்' ஏற்றிவரும் போது —

ஒவ்வொரு தடவையும் அக்கப்பலில் 10 ஆயிரம் பைக்கெட் சிமெந்தும் இனிமேல் ஏற்றிவரப்படும்.

யாழ். அரசாங்க புனர்வாழ்வுப் பகுதி வட்டாரங்கள் இத்தகவலை வெளியிட்டன.

முதல் தடவையாக அடுத்த வாரம் இக்கப்பல் 10 ஆயிரம் பைக்கெட் சிமெந்து மற்றும் 8 ஆயிரம் பரல் மண்ணெண்ணெய் ஆகியவற்றை ஏற்றிக்கொண்டு வடக்கே வரவுள்ளது.

இக்கப்பலில் வரும் சிமெந்தில் ஒரு பகுதி அகதி முகாம்களின் புனரமைப்புக்கு விநியோகிக்கப்படும். எஞ்சிய பகுதி ப.நோ.கூ. சங்கங்கள் மூலம் மக்களுக்கு விற்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

ம.எண்ணெய் விலைகுறைப்பு வடக்கில் தாமதமாகும்

மண்ணெண்ணெயின் விலையை அரசு 2 ரூபா 30 சதத்தால் குறைத்துள்ளபோதும் யாழ்ப்பாணத்தில் இந்த விலைக்குறைப்பு உடனடியாக அமுலுக்கு வராது.

யாழ் செயலகத் திட்டப் பணிப்பாளர் திரு. எஸ். பத்மநாதன் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

தற்போது மக்களுக்கு வழங்கப்பட்டுவரும் மண்ணெண்ணெய் ஏற்கனவே முந்திய விலைக்கு பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் பணம் செலுத்தி கொள்வனவு செய்யப்பட்டது என்றும்—

அந்த மண்ணெண்ணெய்க்கான விலையை குறைக்க முடியாது என்றும்—

அடுத்த வாரம் "மாஹோ" கப்பலில் எடுத்து வரப்படவிருக்கும் மண்ணெண்ணெய் குறைந்த விலைக்கு விற்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (உ-3)

முச்சந்தி முரளி



அதி உத்தமரின் வழியிலை உவர் காமினியாரும் 'ஆசி' பெற வெளிக்கிட்டுவிட்டார் போல...!

இடி மின்னல் தாக்கி இராணுவ மேஜர் மரணம்

கொழும்பு, ஒக். 3

பனாகொட இராணுவ முகாமைச் சேர்ந்த 34 வயதான மேஜர் சஞ்சீவா திஸநாயக்கா மின்னல் தாக்கி மரணமானார்.

கடந்த வியாழக்கிழமை அதிகாலை வத்தளையில் இச் சம்பவம் இடம்பெற்றது.

மறுநாள் நடைபெறவிருந்த தமது காலஞ்சென்ற மனைவியின் மூன்று மாத நினைவு தினமான நிகழ்ச்சிக்குத் தேவையான ஒழுங்குகளைச் செய்து விட்டு நித்திரையில் ஆழ்ந்திருந்த போது, அவரை மின்னல் தாக்கியது என்று தெரிவிக்கப்பட்டது. அவர் அந்த இடத்திலேயே மரணமானார். (எ)

ஜெனரல் ஹமில்டன் அறிவிப்பு

கொழும்பு, ஒக்ரோபர் 3

யாழ்ப்பாணப் பிராந்தியத்தில் ஸ்ரீலங்காப் படைகள் நடத்தத் திட்டமிட்டிருந்த பெரும் தாக்குதல் நடவடிக்கை நிறுத்தி வைக்கப்படுவதாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஹமில்டன் வனசிங்கா அறிவித்திருக்கிறார்.

விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையே எதிர்வரும் 13, 14 ஆம் திகதிகளில் நடைபெறவிருக்கும் பேச்சுவார்த்தைகளுக்கு சாதகமான சூழலை உருவாக்கும் நோக்கில் இந்தப் பாரிய தாக்குதல் திட்டம் கைவிடப்படுகிறது என்றும் —

ஆனாலும் சிறியளவில் தமது இராணுவத் தாக்குதல் நடவடிக்கை தொடரும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-3-4)

அரசின் பிரதிநிதிகளை ஏற்று சந்திரிகாவுக்கு பிரபா பதில்

கொழும்பு, ஒக். 3

அரசின் தூதுக் குழுவில் இடம்பெறும் நான்கு அரச பிரதிநிதிகளையும் ஏற்றுக் கொள்வதாக விடுதலைப் புலிகள் தலைவர் திரு. பிரபாகரன் பிரதமருக்கு பதில் கடிதம் அனுப்பியுள்ளார்.

இக்கடிதம் பிரதமர் சந்திரிகாவிடம் கடந்த திங்கட்கிழமை கையளிக்கப்பட்டதாக கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன.

அந்தக் கடிதத்திலேயே பூர்வாங்கப் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக 13, 14 ஆம் திகதிகளை தாங்கள் தெரிவு செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகவல்களை அமைச்சர் ரத்வத்தை செய்தியாளர் மாநாட்டில் வெளியிட்டார்.

'பூர்வாங்கப் பேச்சுக்களை நடத்துவதற்காக நாம் மூன்று வெவ்வேறு திகதிகளை விடுதலைப் புலிகளுக்கு அறிவித்தோம். அவர்கள் 13, 14ஆம் திகதிகளை தேர்ந்தெடுத்தார்கள் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

அரசுப் பிரதிநிதிகளுடன் செய்தியாளர்களும் வருவர்

யாழ். செல்லும் அரசத் தூதுக்குழுவுடன் கொழும்புப் பத்திரிகையாளர் குழு ஒன்றும் செல்லும்.

அமைச்சர் அனுருத்த ரத்வத்தை செய்தியாளரிடம் முன்கண்ட தகவலை வெளியிட்டார்.

பத்திரிகையாளர்களும் தூதுக்குழுவாக வரமுடியும் என்றும் அவர் கூறினார்.

அரசுப் பிரதிநிதிகள் விமான மூலம் பலாலி செல்வர் என்றும்

அங்கிருந்து யாழ்ப்பாணத்துக்கு அவர்கள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரால் அழைத்துச் செல்லப்படுவர் என்றும் —

அவர் மேலும் சொன்னார்.

''பூர்வாங்கப் பேச்சுகளின் போது யுத்தநிறுத்தம் குறித்தும் அரசத் தூதுக்குழு ஆராயும். யுத்த நிறுத்தம் பற்றி முடிவெடுக்கும் ஆணை

(4ஆம் பக்கம் பார்க்க)

புலிகள் - அரசு பேச்சை இந்தியா எதிர்க்கவில்லை

வெளிவிவகார அமைச்சர் கதிர்காமர் கூறுகின்றார்

கொழும்பு, ஒக். 3

விடுதலைப் புலிகளுடன் அரசாங்கம் நடத்தவிருக்கும் சமாதானப் பேச்சுவார்த்தை குறித்து இந்தியா கவலையடைந்திருப்பதாகவோ, கலவரமடைந்திருப்பதாகவோ அல்லது எதிராக இருப்பதாகவோ நாம் எண்ணவில்லை:

வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் நியூயோர்க்கில் செய்தியாளர் மாநாடு ஒன்றில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

உத்தேச சமாதானப் பேச்சுவார்த்தை பற்றிய அந்த நாட்டின் நிலைப்பாட்டில் விடுத

(4 ஆம் பக்கம் பார்க்க)

தீர்வுக்கு மத்தியஸ்தம் செய்ய ஐ. நா. பொதுச்செயலர் தயார்!

அமைச்சர் கதிர்காமரிடம் நேரில் தெரிவிப்பு

நியூயோர்க், ஒக் 3

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு தமது மத்தியஸ்தத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று ஐ. நா. பொதுச் செயலாளர் பூட்ரஸ் பூட்ரஸ் காலி தம்மைச் சந்தித்த வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரிடம் நேரில் தெரிவித்திருக்கிறார்.

திரு கதிர்காமர் ஐ. நா. பொதுச் செயலாளரை கடந்த செவ்வாய்க்கிழமை அவரது அலுவலகத்தில் மரியாதை நிமித்தம் சந்தித்தார். அப்போதே திரு. பூட்ரஸ் காலி தமது மத்தியஸ்த விருப்பத்தை வெளியிட்டதாக திரு. கதிர்காமர் செய்தியாளர்களிடம் பின்னர் தெரிவித்தார்.

இலங்கைப் பிரச்சினையில் வெளியார் மத்தியஸ்தம் இருக்க மாட்டாது. ஐ. நா.

(4ஆம் பக்கம் பார்க்க)

ஊர்காவற்றுறை தாக்குதலில் ஈ. பி. டி. பியினர் நால்வரே பலி!

கடந்த வார இறுதியில் விடுதலைப் புலிகள் ஊர்காவற்றுறைக்குள் ஊடுருவி நடத்திய கிரனேட் தாக்குதலில் உயிரிழந்த நான்கு பேரும் ஈ. பி. டி. பி அமைப்பைச் சேர்ந்தவர்கள் என [illegible] புப் பத்திரிகை [illegible] வெளியிட்டிருக்கிறது.

கடந்த புதன்கிழமை இடம்பெற்ற இத்தாக்குதலின் போது மேலும் ஆறு ஈ. பி. டி. பியினர் காயமடைந்தனர் என்று ஈ. பி. டி. பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

[illegible] கொண்டிருந்த போது இத்தாக்குதல் இடம் பெற்றதாகவும் அவர் கூறினார்.

மேற்படி ஈ. பி. டி. பியினர் பனைமரம் ஒன்றின் கீழ்நின்று உரையாடிக்கொண்டிருந்த சமயம் அவர்கள் மீது கடல் வழியாக வந்த விடுதலைப் புலிகள் மூன்று கிரனேட்டுகளை வீசினர் என்றும் அவர் தெரிவித்தார்.

'பிளேக்' கட்டுப்பாட்டில்: இந்தியாவின் நம்பிக்கை

கொள்ளை நோய் பரவுவதைக் கட்டுப்படுத்தியுள்ளதாக இந்தியா நம்பிக்கை தெரிவித்துள்ளது.

இந்த நம்பிக்கை சரியானதா என்பது அடுத்த சில தினங்களில் நிரூபணமாகிவிடும் என்று உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

இந்தியத் தலைநகரான புதுடில்லியில் கொள்ளை நோய் காரணமாக நேற்று மற்றும் ஒருவர் மரணம் அடைந்தார் என்று செய்திப் பத்திரிகைகள் கூறுகின்றன. இதுவரை 51 பேர் இந்த நோயால் மரணம் அடைந்தனர். கொள்ளை நோய் ஏற்பட்டிருப்பதாக சந்தேகிக்கப்படும் 3,000 பேர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறார்கள். (உ-எ)

தமிழகத்திலிருந்து திரும்பிய மூவருக்கு கொள்ளை நோய்?

கொழும்பு, ஒக். 3

தமிழ்நாட்டில் இருந்து ஏற்கனவே நாடு திரும்பிய ஆட்களில் மூவருக்கு கொள்ளை நோய் தொற்றியிருக்கக் கூடும் என சந்தேகிக்கப்படுவதாக கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பிராந்தியத்தில் ஏனைய நாடுகளில் கொள்ளை நோய் பரவியிருப்பதாக இதுவரை செய்திகள் வரவில்லை என்றும் —

இந்தியாவில் இருந்து இந்த நோயின் தொற்றுக்கு இலக்காகியிருக்கும் முதல் நாடு ஸ்ரீலங்காவாகவே இருக்கலாம் என அஞ்சப்படுவதாகவும் —

அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கிலும் கொள்ளைநோய் பரவாதிருக்க நடவடிக்கை

செஞ். குழு. ஊடாக அமைச்சு முயற்சி

யாழ்ப்பாணத்திலும், விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள ஏனைய பகுதிகளிலும் கொள்ளை நோய் பரவாதிருப்பதை உறுதி செய்வதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து சுகாதார அமைச்சு செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தி வருகிறது என்று கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (உ-3)

இந்தியாவில் பிளேக் பரவிய பின்னணியில் பாகிஸ்தான்?

விசாரணை நடத்தக் கோரிக்கை

இந்தியாவில் ''பிளேக்'' (கொள்ளை) நோய் பரவியதன் பின்னணியில் பாகிஸ்தான் செயல்பட்டிருக்கக்கூடும் எனச் சந்தேகிக்கப்படுகிறது எனவே இது குறித்து விரிவாக விசாரணை நடத்தவேண்டும்.

இவ்வாறு பாரதீய ஜனதாக்கட்சி இந்திய மத்திய அரசைக் கேட்டிருக்கிறது.

அக்கட்சியின் துணைத் தலைவர் ராஜகோபால் சென்னையில் செய்தியாளர்களிடம் பேசுகையில், பிளேக் நோய்க்கிருமிகளை பாகிஸ்தான் உளவு நிறுவனமே இந்தியாவில் பரப்பியிருக்கவேண்டும் என பரவலாகக் கூறப்பட்டு வருகின்றது என்று சொன்னார்.

அண்மையில் பம்பாயில் இடம்பெற்ற தொடர் குண்டு வெடிப்புகளின் பின்னணியில் பாகிஸ்தான் உளவு நிறுவனமே செயற்பட்டுள்ளது என்றும்—

அதற்கான போதிய சாட்சியங்கள் கிடைத்திருக்கின்றன என்றும் இந்தியா அறிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

காமினிக்கு எதிராக லஞ்சஊழல்வழக்கு

கொழும்பு, ஒக். 3

எதிர்க்கட்சித் தலைவரும். ஐ. தே. கவின் ஜனாதிபதி வேட்பாளருமான காமினி திஸநாயக்காவுக்கு எதிராக லஞ்ச மோசடி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

25 லட்சம் ரூபா பெறுமதியான வாகன கொடுக்கல் வாங்கல் தொடர்பாக— சொத்து விபரங்கள் பற்றி— அவர் தவறான தகவல்களை கொடுத்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் இந்த வழக்கை லஞ்ச ஆணையாளர் திணைக்களம் தாக்கல் செய்துள்ளது.

(4ஆம் பக்கம் பார்க்க)

சாயிபாபாவை தரிசிக்க காமினி இந்தியா பயணம்

எதிர்க்கட்சித் தலைவரும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் ஐ. தே. க. வேட்பாளருமான காமினி திஸநாயக்கா இந்திய பயணமானார்.

அவர் பகவான் சத்திய சாயி பாபாவைச் சந்தித்து ஆசி பெறச் சென்றிருப்பதாக கொழும்புப் பத்திரிகைகள் செய்திகளை வெளியிட்டிருந்தன.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகம் இச்செய்திகளை தவறானவை என்று தெரிவித்துள்ளது.

அவர் தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டு இந்தியா சென்றிருப்பதாகவும் அவரது அலுவலகம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (எ)

சின்னஞ் சிறு விளம்பரம்

விற்பனைக்கு

அழகிய வெள்ளை நிற பொமனேரியன் நாய்க்குட்டிகள் பூச்சிநீக்கப்பட்டவை உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 81/1, [257], கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம். [33150]

மில் விற்பனைக்கு

"மிக்" விற்பனைக்கு. இறைவேட்டர் - 8, அல்லி இல. 7, சோமசிறி, லிஸ்ரர் எஞ்ஜின் புதிதாக சீரமைக்கப்பட்டது. தொடர்பு: விநாயகம் மில், பிரதான வீதி, சங்கானை. (33140)

உடன் தேவை

அழகுசாதன விற்பனை நிலையத்திற்கு ஆண் / பெண் விற்பனையாளர் உடன் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும். தொடர்பு: சுழகம், (சேக்கிங் சென்ரர்), பிரதான வீதி, சங்கானை. [இ-9261]

பொலிஸ் உயர் மட்டத்தில் மாற்றங்கள்

கொழும்பு, ஒக். 3

கொழும்பு மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராக சந்திரா பெர்னாண்டோவும், நிர்வாகத்துக்குப் பொறுப்பாக சிரேஷ்ட பிரதிப்பொலிஸ்மா அதிபர் செனவிரத்னவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் சி. பி. எக்கநாயக்கா குற்றத் தடுப்புப் பிரிவின் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

பொலிஸ் உயர்மட்டத்தில் இது போன்ற மேலும் பல மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. (இ-ஐ)

மகாத்மாவின் நூறாவது தொகுப்பு நூல்

புதுடில்லி, ஒக். 3

மகாத்மாகாந்தி எழுதியவை பேசியவை அனைத்தையும் தொகுத்து புத்தகமாக வெளியிடும் நூறாவது தொகுப்பு நூலை பிரதமர் பி. வி. நரசிம்மராவ் கடந்த வெள்ளிக்கிழமை புதுடில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் வெளியிட்டார். (ஃ)

வடமராட்சியில் சுயதொழில் கடன்

யாழ்ப்பாணம், ஒக். 3

வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தும் நோக்குடன் அண்மையில் வடமராட்சிப் பகுதியில் உள்ள 56 பயனாளிகளுக்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் சுயதொழில் ஊக்குவிப்புக் கடன்கள் வழங்கப்பட்டன.

இதன்படி உடுப்பிட்டித்தெற்கில் 18 பயனாளிகளுக்கும் கெருடாவில் தெற்கில் 38 பயனாளிகளுக்கும் ஒரு பயனாளிக்கு தலா 10 ஆயிரம் ரூபாவீதம் இக் கடன்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஓ)

ஆலய உண்டியலில் சங்கிலி, காப்பு!

யாழ்ப்பாணம், ஒக். 3

யாழ். ஆஸ்பத்திரியில் உள்ள ஞானவைரவர் ஆலயத்தின் உண்டியலில் இருந்து சுமார் 15 ஆயிரம் பெறுமதி மிக்க பவுண் சங்கிலியும், காப்பும் எடுக்கப்பட்டன.

கடந்த வெள்ளிக்கிழமை உண்டியல் திறக்கப்பட்ட சமயம், இவை காணப்பட்டன.

பக்தர் ஒருவர் இவற்றை நேர்த்திக்காக உண்டியலில் போட்டிருக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஓ-15)

ஆசிரியருக்கான கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஒக். 3

யாழ்ப்பாணம் வலயம் -1 பாடசாலைகளில் க.பொ.த உயர்தர வகுப்புகளில் விஞ்ஞானம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு வேம்படி மகளிர் கல்லூரியில் வலயம் 1 விஞ்ஞான கணித மூலவள நிலையத்தின் அனுசரணையுடன் 4 ஆம், 5 ஆம், 7 ஆம் திகதிகளில் காலை 8-30 மணிதொடக்கம் மாலை 4-30 மணிவரை இடம்பெறும்.

இரசாயனவியல் கருத்தரங்கு 4 ஆம் திகதியும், பௌதிகவியல் கருத்தரங்கு 5 ஆம் திகதியும், விலங்கியல் கருத்தரங்கு 7 ஆம் திகதியும் நடைபெறும். (ஃ)

சிவம் வெளியீடு அனைத்தும் புதிய தீபாவளி வாழ்த்து மடல்கள் விற்பனையாகின்றன

No. 1 போஸ்கார்ட் P. C. (அனைத்தும்
No. 1 கட்டிங் புதியவை)
No. 2 போட்கார்ட் புதிய சுவாமி
புதிய கவர்ச்சியான பூவகைகள் (புதியவை)
சினிமா பெரிய அளவில் P. C. (புதியவை)
மற்றும் பல

ஏக விநியோகம்:-
ஸ்ரீ காந்த் புத்தகசாலை
165, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்

தலைமையகம்
மக்மிலன் புத்தகசாலை
யாழ்ப்பாணம்.

★ பரிசு கொடுப்பதற்கு உகந்த சிறுவருக்கான நூல்கள் எம்வசம் உண்டு.

[இ/ 9874]

31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு: 24 — 03 — 1939

உதிர்வு: 04 — 09 — 1994

திருமதி கனகரத்தினம் கங்கேஸ்வரி

(கொல்லங்கலட்டி, தெல்லிப்பழையைச் சேர்ந்தவரும் காலஞ்சென்ற கொல்லங்கலட்டி சைவத்தமிழ் கலவன் பாடசாலை முதன்மை ஆசிரியர் கனகரத்தினம் அவர்களின் அன்பு மனைவி)

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்து எம்மை அன்போடும், பண்போடும், பாசத்தோடும் வளர்த்து நல்வழிகாட்டி வாழவைத்த தெய்வமே! உயிரின் உயிராய் எம்மில் உயிரையே வைத்த எம் அன்னையே! உங்கள் உயிர்பிரிந்து ஓர் திங்கள் ஓடி விட்டதம்மா! கண்கள் குளமாக எம் கண்ணீரையே உமக்குக் காணிக்கையாக்குகின்றோம்.

உங்கள் ஆத்மா சாந்திபெற பிரார்த்திக்கும்;
மகன் க. ராஜாஜி,
மகள் க. சிவகுமாரி.

(33154)

ஓராண்டு நினைவலைகள்

செல்வன்

தர்மரட்ணம் அரவிந்தநாதன்

(சிவா)

மலர்வு: 13-01-1964

உதிர்வு: 13-10-1993

திதி: 03-10-1994

பாசத்தின் உறைவிடமே! பண்பு நிறை பேருருவே
நேசத்தை காட்டி நிர்க்கதிக்குள் ஆக்கிவிட்டு
மாசற்ற மனமுடையோய் மறைந்ததேன் மாமணியே!
நீயில்லா உலகினிலே நிம்மதியில்லையடா
சிரித்த நின்முகம் காண சிந்தை துடிக்குதடா
உன் நினைவும் எம் கனவும் ஓர் நிலையில்லாதது
கனியாகுமுன் விதையாய் விட்டாயே!
ஓராண்டு சென்றிடினும் மாறாது உன் பாசம்
பல ஆண்டு சென்றிடினும் மறையாது உன்நினைவு
இறப்பினும் இறைவனின் நீர் இணைந்திட
இறைவனை இறைஞ்சுகிறோம் அரவிந்தனே.

பிரிவால் துயருறும்;
அம்மா, பெரியம்மா, சகோதர,
சகோதரிகள், மைத்துனி, மைத்துனர்கள்,
மருமக்கள், உற்றார், உறவினர்,
அடியார்கள், நண்பர்கள்;

தகவல்:
சாமியம்மா,
(மணல்தறை அம்மன்)
28/5 மணற்தறை லேன்,
சுத்தர்மடம், யாழ்ப்பாணம்.

31ஆம் நாள் நினைவஞ்சலி



பத்மநாதன் பிரதீபன்

(93ஆம் ஆண்டு உயிரியல மாணவன்)

நிறைவு பெற மழலையாய்! 1974 — 08 — 13
இறைபடியில் மலராய்! 1994 — 09 — 04

பார்த்த முகம் காணாமல்
பள்ளியே கலங்குதடா!
சீர் பூத்த சேவை செய்த
சிறப்புற்ற தலைவா - இன்றும்
நீர் பூத்த விழி யிரண்டும்
நீங்காது வாற்றெடுக்க,
சீர் மாறன் செங்கழல்கள்
சேர்ந்து விட ஏன் துணிந்தாய்?

93 ஆம் ஆண்டு
உயிரியல் மாணவர்கள்,
யாழ், மத்திய கல்லூரி.

[33149]

19ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 05 08 1917

உதிர்வு: 03 10 1975

திருமதி

மேரி கிருபையம்மா இர்ராஜக்கோன்

அம்மா என்றெழுகின்ற ஓலம் - அது
அடி நெஞ்சில் எழுகின்ற நாதம்
உயிரோடு கலந்திட்ட கீதம் - அது
உருகி எம்மை வளர்த்தது ஒரு காலம்
இதயமென்னும் பூக்கோவில் எங்கும்
எங்கள் அம்மாவின் முகந்தானே மலரும்
ஆண்டு பல கடந்திட்ட போதும்
அழியாது நாம் கொண்ட பாசம்.

— அன்புப் பிள்ளைகள்

ஏழாலை வடக்கு, ஏழாலை.
யாழ்ப்பாணம். (33131)

31ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னை மடியில்;
20-04-1960

●●●

ஆண்டவன் அடியில்;
03-09-1994

செல்லத்துரை பத்மராணி (றஞ்சி)

அன்பு கொண்ட நெஞ்சமே - எமையெல்லாம்
அரவணைத்த தென்றலே
சிரிக்கவைத்து சிந்திக்க வைக்கும் - உந்தன்
சிரிப்பின் கூட எத்தனை
அர்த்தங்கள்
எண்ணி நின்றவர்கள்
இதயங்களை ஏங்க வைத்து
சொல்லாமல் சென்றதேனோ?
உமை இழந்த நெஞ்சங்கள் - இங்கு
ஏங்கித் துடிதுடிக்கின்றன - மீண்டும்
இவ் அகிலத்தில் எமையெல்லாம்
ஆதரிக்க வந்திடுவீர்!

மாதம் ஒன்று சென்றாலும் உன் நினைவு
என்றென்றும் எம்மோடு நிற்கும்.
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உன் பிரிவால் துயருறும்;
அன்புத்தாய், அண்ணாமார், அண்ணிமார்,
அக்காமார், அத்தான்மார், மருமக்கள்,
பேரமக்கள், உறவினர்கள்.

நீர்வேலி தெற்கு,
[illegible] (33162)

உடல் நலத்திற்கு கேடுவிளைவிக்கும்

அழுக்கடைந்த உப்பை கொள்வனவு செய்யாதீர்!

யாழ்ப்பாணம், ஒக். 3

தனியாரால் சட்டவிரோதமாக சேகரிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டுவரும் — உடல் நலத்திற்கு கேடான — அழுக்கடைந்த உப்பை — கொள்வனவு செய்யவேண்டாமென தமிழீழ உப்பு உற்பத்தி நிறுவனம் பொதுமக்களுக்கு கோரிக்கை விடுத்துள்ளது.

தற்போது குடாநாட்டில் நிலவும் உவர் வெப்பச்சூழல் காரணமாக புத்தூர், கரணவாய் ஆகிய பகுதிகளில் பெருமளவு கறியுப்பு கை விளைச்சல் கண்டுள்ளது.

இந்த உப்பில் கடலினுள் வீசப்படும் கழிவுப் பொருள்கள் மனித மற்றும் விலங்குகளின் மலம் இறந்த விலங்குகளின் உடல்கள், இறந்த தாவரங்கள் போன்றவற்றால் அழுக்கடைந்த நிலையில் காணப்படுகின்றன.

இவ்வாறான அழுக்கடைந்த பாவனைக்கு உதவாத உப்பு தனியாரால் சட்டவிரோதமாக சேகரிக்கப்பட்டு பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்படுகிறது.

எனவே இவ்வாறான அழுக்கடைந்த உப்பைக் கொள்வனவு செய்ய வேண்டாம் எனவும் உரிய முறையிலே உற்பத்தி செய்யப்பட்டு தமிழீழ உப்பு உற்பத்தி நிறுவனத்தின் விற்பனை செய்யப்படும் உப்பை கொள்வனவு செய்து பயன்படுத்துமாறும் பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது. (ஓ)

உ

குருபீடாதிபதி தெரிவு

இந்துமத குருமார் ஒன்றிணைந்து குருபீடாதிபதியாக
நாயன்மார்கட்டு
"சிவாமஞானி" 'வித்தியா பூஷணம்' மறைதிரு
Dr. ஸ்கந்த - சாம்பசிவ சிவாச்சாரியார்
D. A. M.; M. D. H. & M. I. H.
அவர்களைத் தெரிவு செய்துள்ளனர் என்பதை
சகலருக்கும் அறியத்தருகின்றோம்.

சுபமஸ்து

ச. மகேஸ்வரக் குருக்கள்
(தலைவர்)

இந்துமத குருமார் ஒன்றியம்,
யாழ். மாவட்டம். [33172]

---

31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 12 — 07 — 1905

மறைவு; 03 — 09 — 1994

அமரர் வயிரவபிள்ளை மயில்வாகனம்

எங்கள் மனங்களில் என்றென்றும் நீங்காத நினைவுகளுடன் உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

திருமதி ச. மகேஸ்வரி
சங்கரப்பிள்ளை வீதி,
ஆனைக்கோட்டை. (33196)

31st DAY REMEMBRANCE

BIRTH; 21 — 08 — 1914

DEATH: 03 — 09 — 1994

Mrs
MAKILMALAR RAJENDRAM

Darling Mummy So
Sweet and small
We always thought
You' ll live so long
You went next morn
The day you came
Eighty years was your time
But we'll Remember you
Through out our lives.

Fondly Remembered by:
Son, Dr. Rajendraprasad Family,
and Mrs. Jeganathan.

187, Adiapatham Road,
Thirunelvely. [33137]

உதயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

பழக்கம் மாறுவது எப்போது?

பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தின் கீழ் 1993ஆம் ஆண்டுக்கென ஒதுக்கப்பட்ட நிதிக்குரிய வேலைகளை விரைவில் பூர்த்தி செய்யுமாறு அரச அலுவலகங்கள் மற்றும் பொதுஸ் தாபனங்களை யாழ். திட்டமிடல் பகுதி கேட்டுள்ளதாக ஒரு செய்தி.

சென்ற வருடத்துக்குத் திட்டமிட்ட வேலைகள் எதையும் செய்யாமல் நிறுத்த வேண்டாம் என்றும், அவற்றை விரைவாகச் செய்து முடித்து உரிய ஆவணங்களை அனுப்புமாறும் யாழ். திட்டமிடல் பகுதியின் அறிவுறுத்தல் அமைந்துள்ளது.

இப்போது நடப்பது 1994 ஆம் ஆண்டின் நான்காவது காலாண்டுப் பகுதியாகும். ஆனால் 1993 ஆண்டுக்குரிய வேலைகள் செய்து முடிக்கப்படவில்லை என்பதனை திட்டமிடல் பகுதியின் அறிவித்தல் மூலம் அனுமானிக்க முடிகிறது.

மத்திய அரசாங்கம் தனது பதவிக் காலத்தில் வடபகுதியின் அபிவிருத்திக்குத் தேவையான நிதி ஒதுக்கீடுகளைச் செய்வதில் எவ்வாறு மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடந்து கொண்டு, புறக்கணித்து வந்தது என்பது எவருக்கும் தெரிந்த விடயம்!

வடக்கு, போர் நடக்கும் பிரதேசம். இங்கு அபிவிருத்தி வேலைகளைச் செய்வது சாத்தியமற்றது. பாதுகாப்புக் காரணங்களைக் கருதி இங்கு எந்தத் திட்டத்தையும் நடைமுறைப்படுத்த முடியாமல் உள்ளது — என்றெல்லாம் பல காரணங்களைக் கூறி வடபகுதிக்கு நிதி ஒதுக்கீடுகளைச் செய்யவில்லை.

பன்முகப்படுத்தப்பட்ட நிதியானது நாடாளுமன்ற உறுப்பினர் ரீதியாகக் குறித்தொதுக்கப்படுவதால், அரசினால் அதனை வடபகுதிக்குக் கிடைக்காமல் தடுக்க முடியவில்லை. முன்னை யாழ். மாவட்ட நா. உ.க்கள் தமக்குக் கிடைத்த பன்முகப்படுத்தப்பட்ட நிதி முழுவதையும் யாழ். மாவட்டத்துக்கு வழங்கவில்லை. வேறு பகுதி நா. உ.க்களுக்கு விற்று கமிஷன் பணம் பெற்றார்கள் என்பது கொழும்பு இரகசியம்.

நிலைமை இவ்வாறிருக்கையில் கிடைத்த நிதியைப் பயன்படுத்தி வேலைகளை உடனுக்குடன் பூர்த்தி செய்யாமல் சம்பந்தப்பட்டவர்கள் இழுத்தடித்ததை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

உரிய காலத்திற்குள் செலவிடப்படாத பண ஒதுக்கீடு திறைசேரிக்கு மீளச் சென்றுவிடும் என்பது தெரியாதவரா யாழ்ப்பாணத்து அதிகாரிகள் பணிபுரிகிறார்கள்?

கொழும்பிலிருந்து நிதி கிடைக்கவில்லை! அரசினரும் அங்குள்ள அதிகாரிகளும் புறக்கணிக்கிறார்கள் என்று கூறிக் கொண்டு—

கிடைத்த சொற்பத்தை மக்கள் நலன் கருதி அவர்களின் தேவைகளுக்கு, இப்பகுதி அபிவிருத்திக்கு செலவு செய்யாமல் அசமந்தமாக இருப்பது என்ன நியாயம்? இப்பகுதி மக்களின் நலன்களிலும், தமிழ் பிரதேச முன்னேற்றத்திலும் அக்கறை இல்லாதவர்கள் இங்கே சேவையிலிருந்து என்ன பயன்? இவர்கள் தங்களைத் தமிழ் அதிகாரிகள் என்று கூறுவதில் வெட்கமில்லையா?!

கொழும்புடன் "சண்டை" போட்டு கிடைக்க வேண்டியதை பெறுவதற்குத் தான் திராணி இல்லையென்றாலும்—

கிடைத்த பணத்தை உரிய காலத்தில் செலவிட்டு தமது மக்களுக்கு உதவ வேண்டும் என்று சிந்திக்காதவர்களை மக்கள் மன்னிக்க முடியாது.

அருமருந்தாகக் கிடைத்த பணத்தைச் செலவிடாமல், வேலைகளைப் பூர்த்தி செய்யாமல் இருப்பது கொழும்பு அரசுக்கு மிச்சம் பிடித்துக் காட்டி நல்ல பெயரும், பதவி உயர்வும் பெறுவதற்காகவா?

அரசாங்க அதிகாரிகள் மட்டுமன்றி கிராம முன்னேற்றச் சங்கம், சனசமூக நிலையங்கள் என்பனவும் அபிவிருத்தி வேலைகளைச் செய்யவில்லை என்ற தகவல் மேலும் கவலைக்குரியதாகும்.

நிதி எப்போது கைக்கு வந்து சேரும் திட்டமிட்ட அபிவிருத்தி வேலைகளை உடனடியாகச் செய்வோம் என்று காத்திருக்கும் பழக்கம் எம்மவருக்கு எப்போது வரும்?

படை தரித்து நிற்க முடியாத அளவுக்கு
எமது போராட்டம் வளர்ந்துள்ளது

புலோப்பளைச் சமர் மாவீரர் நினைவுக் கூட்டத்தில் உரை

தென்மராட்சி, ஒக். 3

"எமது மண்ணைக் கைப்பற்ற ஸ்ரீலங்கா படையினர் வந்தாலும் இங்கு நிரந்தரமாகத் தரித்து நிற்க முடியாதளவிற்கு எமது போராட்டம் வளர்ச்சி கண்டுள்ளது"

புலோப்பளைச் சமரில் வீரகாவியமான 82 மாவீரர்களின் நினைவாக கடந்த செப்ரெம்பர் 30ஆம் திகதி புலோப்பளை பிரதாபன் சனசமூக நிலைய முன்றிலில் நடைபெற்ற கூட்டத்தில் உரை நிகழ்த்திய யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி இவ்வாறு கூறினார்.

தென்மராட்சி கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் கலைவாணன் தலைமையில் இந் நிகழ்வு நடைபெற்றது.

திரு. இளம்பரிதி மேலும் பேசுகையில் கூறியதாவது:

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும் நோக்கத்துடன் கவச வண்டிகளுடனும் நவீன ஆயுதங்களுடனும் வந்த எண்ணாயிரம் படையினருடன் எமது 38 போராளிகள் எட்டு மணித்தியாலங்கள் தீரமுடன் போராடி வரலாறு படைத்துள்ள பெருமை இந்த புலோப்பளைச் சமருக்கு உண்டு.

வெட்டவெளிப் பகுதியூடாக வந்து இலகுவில் யாழ். நகரைக் கைப்பற்றி விடலாமென எண்ணியிருந்த ஆயிரக்கணக்கான படையினரை மிக அருகில் நின்று எமது மண்ணில் எதிரியின் காலடி படக்கூடாது என்ற இலட்சிய வெறியுடன் போராடி களப்பலியான இந்த மாவீரர்கள் படைத்த வீர வரலாற்றை இப்பகுதி மக்களால் மறக்க முடியாது.

தமிழீழப் பகுதியில் உள்ள கடற்படை முகாம்களில் உள்ள படையினர் எந்நேரமும் கரும்புலித் தாக்குதல் நடைபெறலாம் என்ற அச்சத்துடனேயே காலத்தைக் கழிக்கிறார்கள் — என்று சொன்னார்.

யாழ். மாவட்ட மகளிர் பிரிவு அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் செல்வி தணிகைச்செல்வி தமது உரையில் கூறியதாவது:

சந்திரிகா அரச பொருளாதாரத் தடையை நீக்குகிறது! சமாதானப் பேச்சுவார்த்தைக்கு வருகிறது என்று தமிழ் மக்கள் சந்தோஷப்பட்டாலும் இது தமிழ் மக்கள் மீது கொண்ட கருணையால் அல்ல. தமிழீழ மண்ணையும் தமிழ் மக்களையும் ஆளவேண்டும் என்ற காரணத்தாலேயே என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்:

தமிழீழத்தில் உள்ள எந்த முகாமையும் பாதுகாக்க முடியாத நிலையில் படையினர் உள்ளதாலேயே சமாதானப் பேச்சுவார்த்தையை விரும்புகிறார்கள். அரசாங்கத்தை இந்த நிலைக்கு கொண்டு வர தமது இன்னுயிரை நீத்த 6,400 மாவீரர்களில் புலோப்பளைச் சமரில் வீரமரணமடைந்த 82 மாவீரர்களும் அடங்குவர்.

80 ஆயிரம் தமிழ் மக்களை அழித்து யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியே தீருவோம் என்று சூளுரைத்த முப்படைத் தளபதிகளுக்கும், ஸ்ரீலங்கா ஜனாதிபதிக்கும் இந்த 82 மாவீரர்களின் வீர தியாகம் பெரும் தலைகுனிவை ஏற்படுத்தியது.

இந்த மாவீரர்களின் வீர தியாகத்தினால் ஆயிரக்கணக்கான மக்களின் உயிர்களும் கோடிக்கணக்கான சொத்துகளும் உடைமைகளும் காப்பாற்றப்பட்டன.

முன்னேறிவந்த படையை புறமுதுகிடச் செய்து நம்மையெல்லாம் இந்த மண்ணில் உலாவவிட்ட இந்த மாவீரர்கள் இப்பகுதி மக்களால் என்றும் மறக்கப்படக் கூடியவர்கள் அல்லர் — என்றார்.

அரசியல் பிரிவு நடுவப் பணியக பொறுப்பாளர் அரசண்ணா தமதுரையில் கூறியதாவது:

போராட்டம் நடத்தும் விடுதலைப் புலிகளை அழித்துவிட்டு தமிழரிடம் ஆட்சியை ஒப்படைப்பதற்கு இராணுவம் குடாநாட்டின் மீது படையெடுப்பை நடத்தவில்லை.

படையெடுப்பின் மூலம் தமிழ் மக்களைக் கொன்றொழித்து மூன்று மைல்களுக்கு ஒன்றாக இராணுவ முகாம்களை அமைத்து சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்தி இறுதியில் எமது தமிழ் மண்ணை சிங்களப் பிரதேசமாக மாற்றுவதே ஸ்ரீலங்கா அரசாங்கங்களின் நோக்கமாகும் — என்றார்.

இக் கூட்டத்தில் அரசியற் பயிற்சிப் பாடசாலை பொறுப்பாளர் வாஞ்சிநாதனும் உரையாற்றினார். (க-117)

சகல அமைச்சுகளிடம் இருக்கும்

மேலதிக வாகனங்களையும் ஒப்படைக்குமாறு உத்தரவு

கொழும்பு, ஒக் 3

சகல அமைச்சுகளும் தங்களிடமுள்ள மேலதிக வாகனங்களை நிதி மற்றும் கொள்கை திட்டமிடல் அமைச்சிடம் திருப்பி ஒப்படைக்கும்படி அரசு கடந்த புதன்கிழமை உத்தரவிட்டது.

கடந்த அரசில் அமைச்சர்கள், ராஜாங்க மற்றும் பிரதி அமைச்சர்கள் ஆகியோர் மொத்தம் 544 வாகனங்களைப் பயன்படுத்தி வந்தனர்.

அமைச்சர், பிரதி அமைச்சர் ஆகியோர் தங்களுக்கென தலா இரண்டு வாகனங்களை வைத்துக் கொண்டு எஞ்சிய வாகனங்களைத் திருப்பி ஒப்படைக்க வேண்டும் என்று கோரப்பட்டுள்ளனர்:

எனினும், அமைச்சர்களும் பிரதி அமைச்சர்களும் டாம்பீகமான கார்களை வைத்திருக்கக் கூடாது என்றும் பணிக்கப்பட்டுள்ளனர்.

யுத்தம் முடியும் வரை

கடற்படையின் செயல்களை கட்டுப்படுத்த முடியாது

கடற்றொழில் அமைச்சர் பேச்சு

வடக்கு - கிழக்கு யுத்தம் முடிவடையும் வரை கடற்படையினரின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த முடியாது.

கடற்றொழில் மற்றும் நீரியல் வள அமைச்சர் இந்திக குணவர்த்தனா முன்கண்டவாறு தெரிவித்தார்;

மட்டக்களப்பில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு பேசுகையில் அவர் முன் கண்டவாறு தெரிவித்தார்.

கடற்றொழிலை மேற்கொள்ளுவதற்கு ஏதுவாக கடற்படையினரின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த கடற்றொழில் அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மீனவர்களின் பிரதிநிதிகள் கூட்டத்தில் வைத்து அமைச்சரைக் கேட்டுக்கொண்டனர்.

அதற்கு பதிலளித்த அமைச்சர் —

"மீனவர்களின் கோரிக்கையை நிறைவேற்றுவது எனது கடமையல்ல. யுத்தம் முடியும் வரை அது சாத்தியப்படாது. இந்த யுத்தத்தினால் மீன்பிடித்தொழில்தான் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. யுத்தம் காரணம் நமது கடல் வளத்தில் ஐம்பது சதவீதம் பயன்படுத்தப்படவில்லை"— என்றும் தெரிவித்தார். (எ)

வட-கிழக்கை அபிவிருத்திசெய்ய அரசு நடவடிக்கை எடுத்துள்ளது

வவுனியாவில் அமைச்சர் சமரவீர தகவல்

கொழும்பு, ஒக். 3

வடக்கு- கிழக்கில் உள்ள மக்களின் சமாதானத்துக்கான எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்யும் வகையில், அப்பகுதிகளை திட்டமிட்ட முறையில் அபிவிருத்தி செய்ய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

வவுனியா செயலகத்தில் கடந்த வியாழக்கிழமை நடந்த அரச அதிகாரிகள் கலந்து கொண்ட மாநாடு ஒன்றில் பேசுகையில் தபால் மற்றும் தொலைத் தொடர்பு அமைச்சர் மங்கள சமரவீர முன் கண்டவாறு தெரிவித்தார்.

தபால் மற்றும் தொலைத் தொடர்பு சேவைகளை வழங்குவதற்கு முக்கியத்துவம் வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

வவுனியாவில் 192 மில்லியன் ரூபா செலவில் 3 ஆயிரம் இணைப்புகளைக் கொண்ட தொலைபேசி அமைப்பு ஒன்றை நிறுவுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

சர்வதேச தொலைபேசி வசதி

வவுனியாவுக்கு சர்வதேச தொலைபேசி தொடர்பு வசதிகள் இன்னும் இரண்டு வாரங்களுக்குள் வழங்கப்படும் என்று பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லா தெரிவித்தார். (ஒ-எ)

புலிகளின் குரல் வானொலியில்

03 – 10 – 1994
திங்கள் இரவு
★ 8-01 — தளிர்கள் — சிறுவர்களுக்கான நிகழ்ச்சி
★ 8-20 — செய்திச்சரம்
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — தரிசனம் — மிருதங்க பூபதி அ. சந்தானகிருஷ்ணன் அவர்களுடனான செவ்வி.

04 – 10 – 1994
செவ்வாய் காலை
★ 7-02—மாவீரவணக்கம்
★ 7-15 — இன்றைய தாரகை
★ 7-30 —செய்திகள்
★ 7-35— பத்திரிகைச் செய்திகள்
★ 7-40 — தாயகப்பாடல்கள்.

யதார்த்த நிலையைப் புரியவைக்கும் கலைப்படைப்புகளை உருவாக்குவோம்

"இன்னும் ஒரு நாடு" வெளியீட்டு விழாவில் உரை

"தென்னிந்திய மற்றும் வெளிநாட்டுத் திரைப்படங்களைப் பார்த்து பலர் கனவுலகில் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். இதை மாற்றி யதார்த்த நிலைகளைப் புரியவைக்கக்கூடிய கலைப்படைப்புகளை உருவாக்குவோம்."

"இன்னும் ஒரு நாடு" முழுநீளப்பட வெளியீட்டு விழாவில் உரை நிகழ்த்திய விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழக திரைப்படப் பிரிவுப் பொறுப்பாளர் திரு நா. பலவன் இவ்வாறு கூறினார்:

"இன்னும் ஒரு நாடு" முழு நீளப்பட வெளியீட்டு விழா கடந்த சனிக்கிழமை யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் முல்லை மாவட்ட கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு: சங்கர் தலைமையில் நடைபெற்றது.

திரு. பலவன் தொடர்ந்து பேசும்போது கூறியதாவது:

இந்திய அமைதிப்படையின் அட்டூழியங்களைச் சித்தரிக்கும் வகையிலும், மேஜர் கின்னியின் கதையை மையமாகக் கொண்டும் போராளிகள் இந்த மண்ணின் விடிவுக்காக எத்தகைய துயரங்களைச் சந்தித்தார்கள் என்பதை இப்படம் எடுத்துக் காட்டுகின்றது. அதன் வெற்றிக்கு முல்லைமாவட்ட மக்கள், முக்கியமாக நெடுங்கேணி மக்கள் தமது ஒருமித்த பங்களிப்பை வழங்கியுள்ளனர். பல துன்பங்கள் துயரங்களின் மத்தியிலும் பலர் ஆகுதியான போதிலும் கூட, விடுதலைப் போருக்கு இது சுமையல்ல என்ற வகையில் போராளிகள், கலைஞர்கள் மற்றும் மக்களின் பங்களிப்புக்கள் அமைந்திருந்தன— இவ்வாறு அவர் கூறினார்.

திரு. சங்கர் தமது தலைமை உரையில் கூறியதாவது:

"தமிழோசை", "இது எங்கள் தேசம்" போன்ற நல்ல படங்களை அடுத்து எமது மூன்றாவது படமாக "இன்னும் [illegible] வருகின்றது. [illegible] மேஜர் கின்னி [illegible] சிறந்த முறையில் படமாக்க தேசியத் தலைவர் நல்ல பல திட்டங்களை வகுத்துத் தந்தார். நெடுங்கேணி முத்து ஐயன்கட்டில் உள்ள இருமலையில் இருந்து இடம்பெயர்ந்து வந்த மக்களின் ஆதரவுடன் எடுக்கப்பட்ட இந்தப் படத்தின் வெற்றிக்கு இயக்குநரின் கடின உழைப்பே காரணம் ஆகும். கலைகளினூடாக எமது கதைகளை வெளிநாடுகளுக்கு எடுத்துக் கூற இந்தப் படங்கள் உதவும் — இவ்வாறு அவர் கூறினார்.

திரு. செம்பியன் செல்வன், முல்லை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. பூவண்ணன், குப்பிளான் ஐ. சண்முகன், திரு. குமணன், இணை இயக்குநர் திரு. த. ஜெகதாசன், கலை பண்பாட்டுக் கழக மகளிர் அமைப்பு பொறுப்பாளர் செல்வி மகேஸ், திரு. கேசவராசன் ஆகியோரும் [illegible] பொறுப்பாளர் திரு. க. ப. தமிழ்ச்செல்வன் இயக்குனருக்குப் பதக்கம் அணிவித்து கலைஞர்களைக் கௌரவித்தார்.

"இன்னும் ஒரு நாடு" படத்தில் முக்கிய பாத்திரம் ஏற்று நடித்த 94 வயதான நாச்சிப்பிள்ளை என்னும் மூதாட்டியும் மேடையில் அமர்ந்திருந்தார். மூதாட்டியின் நடிப்பு பலராலும் பாராட்டப்பட்டது. அவருக்கான கௌரவம் திரு. தமிழ்ச்செல்வனால் அளிக்கப்பட்ட போது பார்வையாளர்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்து தமது பாராட்டுக்களைத் தெரிவித்தனர்.

"இன்னும் ஒரு நாடு" ஒளிப்பதிவு நாடாவை முல்லை மாவட்ட சிறப்புத் தளபதி திரு. பவானிடம் இருந்து நிதர்சனம் பொறுப்பாளர் தமிழன்பன் பெற்றுக்கொண்டார். (க-111)

காமினி ஒரு கனவான் ஹேமா பாராட்டு

கொழும்பு, ஒக். 3

காமினி திஸநாயக்கா ஒரு கனவான். மறைந்த ஜனாதிபதி பிரேமதாஸாவின் மனைவி ஹேமா முன்கண்டவாறு பாராட்டியிருக்கிறார்.

தமது மகன் சஜித்துக்கு அம்பாந்தோட்டை மாவட்ட ஐ.தே.க. அமைப்பாளர் நியமனம் வழங்கப்பட்டிருப்பது குறித்து கருத்து வெளியிடுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்;

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐ.தே.க. வேட்பாளரான காமினியை ஆதரிப்பது குறித்து எமது குடும்பம் இன்னும் ஒரு முடிவும் எடுக்கவில்லை.

எனது மகன் சஜித் ஐ.தே.க. அமைப்பாளராக அம்பாந்தோட்டை மாவட்டத்துக்கு நியமிக்கப்பட்டிருப்பதால், ஐ.தே.க. வேட்பாளரையே ஆதரிக்க வேண்டிய நிலை எமக்கு ஏற்படலாம்— என்றும் ஹேமா கூறினார்.

பிரேமதாஸா ஜனாதிபதியாக இருந்த போது அவரைப் பதவி நீக்கஞ் செய்ய லலித் அத்துலத் முதலியுடன் சேர்ந்து அவருக்கு எதிராக அரசியல் குற்றப் பிரேரணை ஒன்றை நாடாளுமன்றத்தில் கொண்டு வர காமினி திஸநாயக்கா முயற்சித்தார் என்பது குறிப்பிடத்தக்கது; (எ)

பிரதி அமைச்சரான

சமரவீர வீரவன்னிக்கு தொடர்ந்தும் விளக்கமறியல்

பிணை மனு நிராகரிக்கப்பட்டது

கொலை வழக்கு தொடர்பாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பிரதி அமைச்சர் சமர வீரவீரவன்னியை பிணையில் விடுதலை செய்யக் கோரும் மனு மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் நிராகரிக்கப்பட்டது.

இம் மனுவை, பிரதி அமைச்சரின் மனைவி தாக்கல் செய்திருந்தார்.

இந்த நிலையில், திரு. வீரவன்னி கடந்த 28 ஆம் திகதி பதுளை நீதிவான் முன்னிலையில் மீண்டும் ஆஜர் செய்யப்பட்டார்;

அப்போது நீதிவான் சம்பத் அபேக்கூன் பிரதி அமைச்சரை இம் மாதம் 12 ஆம் திகதி வரை மேலும் விளக்க மறியலில் வைக்கும்படி உத்தரவிட்டார்.

கடந்த பொதுத் தேர்தல் தினத்தன்று, ஐ. தே. க. ஆதரவாளரான குட்டியின் வீட்டில் சமரதிவாகரவை கொலை செய்த சம்பவம் தொடர்பாக வீரவன்னி மீது இவ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. (எ)

கொழும்பு துறைமுகத்தில் எலிகள் மீது பரிசோதனை

கொழும்பு, ஒக். 3

கொழும்புத்துறைமுகம் மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் காணப்படும் எலிகள், கொள்ளை நோயைப் பரப்பும் தெள்ளுப் பூச்சிகளினால் பாதிக்கப்பட்டுள்ளதா என்பதைக் கண்டறியும் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது;

பொரளையில் உள்ள வைத்திய ஆராய்ச்சி நிலையத்தின் அதிகாரிகள் இந்த ஆய்வை தற்போது முழு வேகத்தில் நடத்தி வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (எ)

தாயகம் திரும்பும் அகதிகளுக்கு

வவுனியாவிலும் கொள்ளை நோய் தடுப்பு பரிசோதனை

தமிழகத்தில் இருந்து வவுனியா திரும்பும் இலங்கைத் தமிழ் அகதிகள் வவுனியா ரயில் நிலையத்தில் உள்ள முகாமில் ஆறு தினங்களுக்கு தடுத்து வைக்கப்பட்டு கொள்ளை நோய்த்தடுப்பு வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவர் என்று அறிவிக்கப்படுகிறது.

சென்னையில் இருந்து கப்பல் மூலம் திருமலை வந்தடைந்த அகதிகளில் 200 பேர் கடந்த வெள்ளிக்கிழமை வவுனியா திரும்பவிருந்தனர். அவர்களையே வவுனியா ரயில் நிலைய முகாமில் தடுத்து வைத்து கொள்ளை நோய் வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்துவது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதன் பின்னரே இவர்கள் அவரவர் இடங்களுக்கு அனுப்பி வைக்கப்படுவர் என்றும் தெரிவிக்கப்பட்டது; (எ)

சிறிசேன கூரேக்கு எதிராக நடவடிக்கை இல்லை

ஐ. தே. க. தலைமைப்பீடம் முடிவு

கொழும்பு, ஒக். 3

முன்னாள் அமைச்சர் சிறிசேன கூரேக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதில்லை என்று ஐ.தே.க. தலைமைப்பீடம் தீர்மானித்துள்ளது;

ஐ. தே. க. பொதுச் செயலாளர் டாக்டர் காமினி விஜேசேகரா முன்கண்டவாறு தெரிவித்தார்.

திரு. கூரே அரசியலில் இருந்து விலகவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

கட்சிக்கு விரோதமான செயல்களில் ஈடுபட்டு வருவதன் காரணமாக திரு. கூரே மீதுகட்சிஒழுங்கு நடவடிக்கை எடுக்கவிருப்பதாக பரவலாகப் பேசப்பட்டு வந்தது.

மட்டக்களப்பு மாவட்ட

ஐ.தே.கட்சி எம்.பி. வீட்டை மு. காங்கிரஸினர் தாக்கினர்

ஜனாதிபதியிடம் முறைப்பாடு

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஐ.தே.க எம்.பியான அலிஸாகிர் மௌலானாவின் ஏறாவூர் வாசஸ்தலத்தின் மீது கடந்த வியாழக்கிழமை இனந்தெரியாத நபர்கள் குண்டுத் தாக்குதல் நடத்தினர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஆயுததாரிகளும் ஆதரவாளர்களே இத்தாக்குதலை நடத்தியிருப்பதாக புத்தளம் மாவட்ட ஐ.தே.க. எம்.பி. ஏ.ஆர். ஹாஜி, ஏ.எச்.எம். அஸ்வர் ஜனாதிபதி விஜேதுங்காவைச் சந்தித்து முறையிட்டார்.

இதனை அடுத்து, அச்சம்பவம் விசாரித்து நடவடிக்கை எடுக்கும்படி பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஜெனரல் வனசிங்காவை ஜனாதிபதி பணித்தார். [எ]

காட்டினில் மரங்களை தறிக்காதீர்
நாட்டில் வளங்களைக் குறைக்காதீர்

அறிவித்தல்

கொக்குவில் மேற்கு ஸ்ரீ சிவசுப்பிரமணிய
(முதலிய) கோவிலில் 1-10-94 நடைபெறவிருந்து,
மழைகாரணமாக பிற்போடப்பட்ட
பொன் மதிமுகராசாவின் பட்டிமன்றமும்,
யாழ். ரமணனின்
ராஜன் இசைக்குழுவினர் வழங்கும்
இன்னிசை விருந்தும்

இன்று (03-10-1994) திங்கட்கிழமை பிற்பகல் 7 மணிக்கு ஆலய முன்றலில் நடைபெறும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

பரிபாலனசபையும்,
இளைஞர் குழுவும்.

(33167)

மரண அறிவித்தல்கள்

திரு. சின்னையா கதிர்காமநாதன்

[முன்னாள் மக்கள் வங்கி (யாழ்ப்பாணம்) முகாமையாளர்]

உரும்பிராய் தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கனடாவை வசிப்பிடமாகக் கொண்டவருமான சி. கதிர்காமநாதன் கனடாவில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா - சின்னம்மா தம்பதிகளின் புதல்வரும், மல்லிகா (முன்னாள் தொலைத் தொடர்பு திணைக்கள உத்தியோகத்தர்) அவர்களின் அன்புக் கணவரும், கௌசல்யா, ஸ்ரீதரன், வசீகரன் ஆகியோரின் தந்தையும், காலஞ்சென்ற நவமணி, மகேஸ்வரி, சரஸ்வதி, பொன்மணி, பஞ்சரத்தினம், கனகம்பிகை, இந்திராணி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் சமக்கிரியைகள் 02-10-1994 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் நடைபெற்றன. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
இந்திராணி சுப்பிரமணியம்.
(சகோதரி)

உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய்.
[33163]

முருகேசு சந்திரசேகரம் (ரத்தினம்)

(உரும்பிராய் வடக்கு)

கைதடியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் "சிவ விலாஸ்" உரும்பிராயை வசிப்பிடமாகக் கொண்டவருமான சந்திரசேகரம் [ரத்தினம்] 02-10-1994 இல் இறையடி சேர்ந்துவிட்டார்.

இவர் சாந்தமதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற முருகேசு — நாகமுத்து தம்பதிகளின் கனிஷ்ட புதல்வரும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி யோகசரஸ்வதி தம்பதிகளின் மருமகனும், திருவாரூரன் [கனடா], திருவரங்கன் ஆகியோரின் அன்புத் தந்தையும், தாமோதரம்பிள்ளை, ஆறுமுகம், யோகம்மா, சின்னத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரரும், கனகசபை (கனடா), ஸ்ரீகாந்தன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 02-10-94 அன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றன. உற்றார், உறவினர், நண்பர்கள் இத்தகவலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
இ. பகீரதன்
[மைத்துனர்]

"சிவ விலாஸ்"
உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய்.
(33169)

திருமதி வாலாம்பிகை நடராசா

(நயினாதீவு)

நயினாதீவு 5 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி வாலாம்பிகை நடராசா 01-10-1994 இல் கொழும்பில் காலமானார்.

இவர் நடராசாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான முத்துக்குமரு - மீனாட்சி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கதிரேசு - செல்லமுத்து தம்பதிகளின் அன்பு மருமகளும், திரு நல்லையா, திருமதி மனோன்மணி (ஓய்வுபெற்ற ஆசிரியை) திருமதி ருக்மணி, ஆகியோரின் அருமைச் சகோதரியும், திருமதி இராசமணி, காலஞ்சென்ற தம்பாபிள்ளை (ஓய்வுபெற்ற ஆசிரியர்) காலஞ்சென்ற செல்லத்துரை, பொன்னுத்துரை (ஓய்வுபெற்ற புகையிரத நிலைய அதிபர்) திருமதி கனகம்மா ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் 02-10-1994 அன்று கொழும்பில் நடைபெற்றன. உற்றார், உறவினர், நண்பர்கள் இத்தகவலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி, ருக்மணி சரவணமுத்து
(சகோதரி)

109, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.
(33170)

ஹென்றி பசுபதி

(ஓய்வுபெற்ற சிறைச்சாலை உத்தியோகத்தர்)

ஏழாலையைப் பிறப்பிடமாகவும், மட்டுவில் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட ஹென்றி பசுபதி நேற்று (2. 10. 94) இல் காலமானார்.

இவர் பொன்னாச்சிப்பிள்ளையின் அன்புக் கணவரும் திரு தி. தேவராசா இராஜேஸ்வரி [நெதர்லாந்து] திருமதி. ஜீவதாஸ் ஈஸ்வரி (மக்கள் வங்கி சாவகச்சேரி) திருமதி. தெய்வேந்திரம் மங்களேஸ்வரி, திரு. பகீரதன் [பிரான்ஸ்], திருமதி. சங்கரசிவம் நிர்மலேஸ்வரி ஆகியோரின் தந்தையாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று திங்கள் பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வேம்பிராய் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்,
திருமதி. ஈஸ்வரி ஜீவகதாஸ்

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.
(33171)

தேசியப் பாடசாலைகளை நிர்வகிப்பதற்கு தனிப்பிரிவு

பிரதேச பணிமனைகளுக்கு இனி அதிகாரம் இல்லை

கொழும்பு, ஒக். 3

வடக்கு- கிழக்கு மாகாணத்தில் உள்ள தேசிய பாடசாலைகளை நிர்வகிப்பதற்காக மாகாண கல்வி அமைச்சில் தேசிய பாடசாலைகள் பிரிவு ஏற்படுத்தப்பட்டிருப்பதாக மாகாண கல்விப்பணிப்பாளர் திரு. கே. தியாகராசா பிரதேச கல்விப்பணிப்பாளர்களுக்கு அறிவித்திருக்கிறார்.

இனிமேல் பிரதேச கல்விப் பணிமனைகள் தேசிய பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கு மாதாந்த சம்பளத்தை மட்டுமே வழங்கும். ஏனைய விடயங்களை மாகாண கல்வி அமைச்சில் உள்ள தேசிய பாடசாலைகள் பிரிவு மேற்கொள்ளும்.

தேசிய பாடசாலைகளுக்குரிய நேர அட்டவணை, மேற்பார்வை நடவடிக்கைகள், அதிபர், ஆசிரியர் விடுமுறை — இடமாற்றம், நியமனம் ஆகியவற்றை மாகாண கல்வி அமைச்சு மேற்கொள்ளும். சம்பந்தப்பட்டோரின் சுயவிவரக்கோவைகளும் பிரதேசகல்வி அலுவலகங்களில் இருந்து அமைச்சிற்கு அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளது.

அத்தோடு தேசிய பாடசாலைகளுக்குரிய கட்டடம், தளபாடம் மற்றும் பௌதிக தேவைகளையும் மாகாண அமைச்சு இனிமேல் நேரடியாக வழங்கும். (2-3)

தம்மைத் திருப்பி அனுப்பும் முடிவை ஆட்சேபித்து

சுவிஸில் ஈழத் தமிழர்கள் தொடர் உண்ணா விரதம்

கொழும்பு, ஒக். 3

தனது நாட்டில் உள்ள ஈழத் தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்ப சுவிஸ் அரசு நடவடிக்கை எடுத்து வரும் இவ்வேளையில் சுவிஸ் அரசின் மானிடாபிமானமற்ற இந் நடவடிக்கையை கண்டித்து அந் நாட்டின் பல பகுதிகளிலும் எதிர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அறிவிக்கப்படுகிறது.

அங்குள்ள இடதுசாரி முன்னணியுடன் இணைந்து சுவிஸ் தமிழர் சங்கம் கடந்த 25 ஆம் திகதி ஆரம்பித்த உண்ணாவிரதப் போராட்டம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

ஆண்கள் பெண்கள் உட்பட நூற்றுக்கு மேற்பட்ட தமிழர்களின் ஆதரவுடன் ஆரம்பமான இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் சுவிஸ் மக்களும் கலந்து கொண்டனர்.

முதலில் 'சூரிச்' நகரில் உள்ள கன்லைஸ் மைதானத்தில் ஆரம்பிக்கப்பட்ட இந்த உண்ணாவிரதம் பின்னர் கோக்ஸ்ராசா என்னும் பகுதியில் தொடர்ந்து நடந்து வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

தமிழர்களின் இந்தப் போராட்டம் தொடர்பான செய்திகள் சுவிஸ் நாட்டு தொலைக்காட்சி, வானொலி மற்றும் பத்திரிகைகளில் முக்கிய இடம் பிடித்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தமிழர்களைத் திருப்பி அனுப்புவது என்ற முடிவை மாற்றக் கோரியே இப் போராட்டம் நடத்தப்படுகிறது. (ஐ-3)

கிராமிய பாசறை நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், ஒக் 3

கைதடி நாவற்குழி தெற்கு மறவன்புலோ கிராமியப் பாசறை மாதாந்த நிகழ்ச்சி இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணி முதல் நடைபெறும்.

மாலை நிகழ்ச்சியில் தென்மராட்சி பொறுப்பாளர் திரு. வீமன் தேசியக் கொடியேற்ற, பாசறைப் பொறுப்பாளர் திரு. குணம் விளையாட்டை ஆரம்பித்து வைப்பார்.

மாதர் சங்கத் தலைவி இரத்தினபூபதி தலைமையில் இரவு நிகழ்ச்சிகள் நடைபெறும்: இதில் கருத்துரைகள், நடனம் கும்மி, 'கோலாட்டம்' நாடகங்கள் முதலிய கலை நிகழ்ச்சிகள் இடம் பெறும். (க)

புத்தூர் மக்களுக்கு நாளை பூச்சி மருந்துச் சிகிச்சை

யாழ்ப்பாணம், ஒக. 3

புத்தூர் கிராமத்தில் உள்ள மக்களுக்கு பூச்சி மருந்து கொடுக்கும் சிகிச்சை நாளை செவ்வாய்க்கிழமை காலை நடைபெறவுள்ளது.

யாழ். றோட்டறிக் கழகத்தின் ஆதரவில் புத்தூர் அரசினர் வைத்தியசாலையில் (Central Dispensary) நடைபெறவுள்ள இந்தச் சிகிச்சையில் வைத்தியர்களின் ஆலோசனையைப் பெற்று பூச்சி மருந்து உட்கொள்ளலாம்.

இரத்தச் சோகை உள்ளவர்களுக்கு பூச்சி மருந்து அவசியமாகும். ஏனையோரும் ஆறு மாதங்களுக்கு ஒரு தடவை பூச்சி மருந்து உட்கொள்வதால் பல வியாதிகளைத் தடுக்கலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

புத்தூர் மக்கள் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பூச்சி மருந்தை வைத்திய ஆலோசனைப் பிரகாரம் உட்கொள்ள வசதியுண்டு என்று றோட்டறிக் கழக சமூக சேவைப் பிரிவு வட்டாரங்கள் தெரிவித்தன. (க)

கொழும்பிலிருந்து 'கோமாரி' புதனன்று வந்து சேரும்

யாழ்ப்பாணம், ஒக். 3

உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களுடன் 'கோமாரி' கப்பல் நாளை மறுதினம் பருத்தித்துறைக்கு வந்துசேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இடம் பெயர்ந்தோருக்கான ஓகஸ்ட் மாதத்துக்குரிய உலர் உணவு நிவாரணம் வழங்க போதியளவு பொருள்கள் தற்சமயம் கையிருப்பில் இல்லை என்றும் — எனவே 'கோமாரி' கப்பல் இங்கு வந்து சேர்ந்ததும் ஓகஸ்ட் மாதத்துக்கான நிவாரணம் முழுமையாக வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அடுத்த மாதத்துக்குரிய நிவாரண முத்திரைகளும் இந்தக் கப்பலில் எடுத்துவரப் பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)

இன்று

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுப் பிரிவின் பளை வட்டத்தினர் இப் பகுதியில் நல்லின ஆடு, மாடுகள் வளர்ப்பதற்கென 47 பயனாளிகளுக்கு கடன்களை வழங்கவுள்ளனர். இக் கடன் வழங்கும் வைபவம் இன்று திங்கட்கிழமை பி. ப. 3 00 மணிக்கு பளை வட்ட அலுவலகத்தில் நடைபெறும்.

மாடு வளர்ப்புக் கடன் 16 பேருக்கும், ஆடு வளர்ப்புக் கடன் 31 பேருக்கும் வழங்கப்படவுள்ளன. [எ-117]

★ ★ ★

மெய்கண்ட தேவர் ஆதீனம் இன்று திங்கட்கிழமை காலை 9 மணிமுதல் யாழ். கலைப்புலவர் வீதி திருவாசகர் மன்றத்தில் சிவஞானசித்தியார் அருளிய அருள்நந்தி சிவாசாரியார் நினைவைக் கொண்டாடவுள்ளது.

காலை 11 மணிமுதல் முன்னாள் அதிபர் திரு சி. தில்லையம்பலம் மறைவஞ்சலி நிகழ்ச்சி இடம்பெறும்.

★ ★ ★

சர்வோதயத்தின் ஆதரவில் இயங்கிவரும் ஆனைக்கோட்டை ஆறுகால் மடம் அறிவொளி பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டி இன்று [திங்கள்] பிற்பகல் ஒரு மணிக்கு தில்லை வயல் மைதானத்தில் ஒரு மணிக்கு நடைபெற உள்ளது. (ஐ 30)

தீர்வுக்கு

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வோ அல்லது வேறு எந்த மத்தியஸ்தமோ ஏற்படும் சாத்தியம் இருப்பதாகத் தாம் எண்ணவில்லை என்றும் அமைச்சர் கூறினார்.

"எமது பிரச்சினையை எமது நாட்டிலுள்ள எமது வளங்களைப் பயன்படுத்தி தீர்க்க எம்மாலான முயற்சிகளை நாம் மேற்கொள்வதையோ விரைவில் நடைபெறவிருக்கும் சமாதானப் பேச்சுக்கள் எடுத்து [illegible] றன" என்றும் [illegible] மர் தெரிவித்தார். (உ-எ)

புலிகள்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

லைப் புலிகள் தலைவர் பிரபாகரன் பற்றிய இந்தியாவின் மனப்பாங்கு சம்பந்தப்பட்டுள்ளது என்பது பற்றியும் நாம் உணரவில்லை" என்றும் அவர் கூறினார்.

விடுதலைப் புலிகளுடனான உத்தேச சமாதானப் பேச்சு இந்தியாவுடனான உறவுக்கு அசௌகரியமாக இருக்காதா என்ற கேள்விக்கே அவர் முன் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் சொன்னதாவது:

பிரதமர் நரசிம்மராவின் விசேட தூதர் கொழும்பு வந்து பிரதமர் சந்திரிகாவைச் சந்தித்தார். அச்சந்திப்பு பற்றி பலரும் பலவிதமாக எண்ணினர்; நிறைய வதந்திகளும் வெளியாகின. இவற்றுக்கு எல்லாம் முரணாக அச்சந்திப்பில், எதிர்வரும் சமாதானப் பேச்சுக்களில் இந்தியாவின் பங்கு குறித்து வேண்டுகோளோ, கோரிக்கையோ இந்தியாவின் சிறப்புத் தூதரால் விடுக்கப்படவில்லை. இதை நான் வெளிப்படையாகத் தெரிவிக்கின்றேன்" என்றார்.

"இந்தியாவின் தற்போதைய தலைமையிடமான கொள்கையை நான் உண்மையாக நம்புகின்றேன். இனப்பிரச்சினைக்கு திருப்திகரமான தீர்வு காணப்படுமானால் அது இந் [illegible] இருக்கும்" — என்றார். (உ-எ)

ஆசிரியர் தினம்: கலந்துரையாடல்

ஆசிரியர் தினம் தொடர்பான கலந்துரையாடல்கள் இன்று யாழ்ப்பாணம், நல்லூர் ஆகிய கல்விக் கோட்டங்களில் நடைபெறவுள்ளன.

நல்லூர் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த பாடசாலைகளின் அபிவிருத்திச் சங்கங்களின் செயலாளர்கள் பழைய மாணவர் சங்கங்களின் தலைவர்கள் செயலாளர்கள் மாணவர் மன்றத் தலைவர்கள் ஆகியோருக்கான கலந்துரையாடல் இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரி மண்டபத்திலும் —

யாழ்ப்பாணக் கல்விக்கோட்டத்தைச் சேர்ந்த பாடசாலைகளின் மேற்படி உறுப்பினர்களுக்கான கூட்டம் இன்று பிற்பகல் 4 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மண்டபத்திலும் நடைபெற உள்ளன.

சம்பந்தப்பட்ட அனைவரையும் உரிய இடங்களில் குறித்த நேரத்தில் சமூகமளிக்குமாறு யாழ்ப்பாணம், நல்லூர் கோட்டங்களின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

காமினி...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

இதேவேளை—

அம்பஹா மாவட்ட ஐ. தே. க. எம். பி, ரெஜினால்ட் பெரேராவுக்கு எதிராகவும் லஞ்சத்திணைக்களத்தினால் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3 லட்சம் ரூபா பெறுமதியான வாகனம் ஒன்றைக் கொள்வனவு செய்தது தொடர்பாக பொய்யான தகவல்களைச் சமர்ப்பித்ததாக இவர் மீது குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது. (உ 3-4-எ-6)

அரசுப்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பூர்வாங்கப் பேச்சு நடத்தப் [illegible] அரசுக் குழுவுக்கு வழங்கப்படவில்லை. யுத்த நிறுத்தம் மற்றும் முக்கிய விஷயங்கள் பற்றிய விடுதலைப் புலிகளின் எண்ணத்தை மட்டும் இந்த அரசுக்குழு பிரதமருக்கு தெரிவிக்கும். பூர்வாங்கப் பேச்சுகளின் [illegible] ஒரு யுத்தநிறுத்தம் அமுலுக்கு வரும்" — என்றும் அவர் கூறினார். (உ-எ)

தப்பியோடிய சிப்பாய் சவுதியிலிருந்து கடிதம்!

பி.பி.ஸி சிங்கள சேவைக்கு அனுப்பினார்

இலங்கை இராணுவத்தில் இருந்து தப்பியோடிய சிப்பாய் ஒருவர், சவுதி அரேபியாவின் தலைநகர் ரியாட்டில் இருந்து பி. பி. ஸி. சிங்களச் சேவைக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

தம்மைப் போன்று இராணுவத்தில் இருந்து தப்பியோடிய பலர் சவுதி அரேபியாவில் வேலை செய்து வருகின்றனர் என்று அவர் தமது கடிதத்தில் தெரிவித்திருக்கிறார்.

இலங்கையில் தற்போது நடக்கும் யுத்தத்தில் தாம் இறந்து விட்டால் தமது தாயாரையும் தங்கையையும் பார்ப்பதற்கு ஒருவரும் இல்லாமற் போய்விடுவார்கள் என்ற காரணத்தினால் இராணுவத்தில் இருந்து தான் தப்பியோடியதாகவும் சம்பந்தப்பட்ட சிப்பாய் தமது கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளார்.

வறுமை காரணமாகவே தாம் இராணுவத்தில் சேர்ந்ததாகவும் அவர் தெரிவித்தார். [ஐ-எ-6]

தமிழ்மொழி மூல ஆசிரியர்கள் 1700 பேர் விரைவில் நியமனம்

தமிழ், முஸ்லிம் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நீக்கும் விதத்தில் கல்வி, உயர்கல்வி அமைச்சு விரைவில் ஆயிரத்து 700 ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கவுள்ளது.

ஜி.சி.ஈ. உயர்தர பரீட்சையில் சித்தியடைந்த ஆயிரம் பேருக்கும், 700 பட்டதாரிகளுக்கும் நியமனம் வழங்கப்படவிருப்பதாக கல்விச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் ஏ. எஸ். வீரரத்ன தெரிவித்தார். (உ-3)

அரசின்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அரசுத் தூதுக் குழுவில் இடம்பெறும் பிரதிநிதிகளின் பெயர் விபரங்களை அறிவித்து திரு. பிரபாகரனுக்கு அனுப்பிய கடிதத்தில் —

யாழ்ப்பாணத்துக்கு மீண்டும் மின் விநியோகத்தை ஏற்படுத்தல், நீர்ப்பாசன திருத்த வேலைகளை மேற்கொள்ளுதல் மற்றும் பொது வசதிகளை புனரமைத்தல் ஆகிய பணிகளுக்கு திரு பிரபாகரன் ஒத்துழைப்புத்தர முன்வந்துள்ளதற்கு பிரதமர் சந்திரிகா மகிழ்ச்சி தெரிவித்திருந்தார்.

அமைச்சர் ரத்வத்தை இதனைச் செய்தியாளர் மாநாட்டில் வெளியிட்டார். (உ-எ)

கடற் படையினரின் 8 சடலங்கள்

கற்பிட்டிக் கடலில் விடுதலைப் புலிகளினால் மூழ்கடிக்கப்பட்ட சாகரவர்த்தனா கடற்படைக் கப்பலைச் சேர்ந்த எட்டுப் படையினரின் சடலங்கள் மீட்கப்பட்டு அடையாளங்காணப் படுவதற்காக கொழும்பில் உள்ள பொலிஸ் பிரேதச் சாலையில் வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது. [உ-ர]

'கமரா' தவறிவிட்டது

கடந்த சனிக்கிழமை [01-10-1994] இரவு கிளாலிக் கடற்பாதையில் பயணிகள் இறங்குதுறையில் பெறுமதி மிக்க புகைப்படக்கருவி [கமரா] ஒன்று தவறிவிட்டது. அதனை எடுத்தவர்கள் தயவுசெய்து தந்துதவுமாறு கேட்டுக் கொள்கிறோம். கிளாலி இறங்குதுறைச் செயலகத்திலோ அல்லது குளப்பிட்டிச் சந்தி மோட்டார் சைக்கிள் திருத்தும் கராச்சிலோ ஒப்படைத்து உதவுமாறு வேண்டுகிறோம். உரிய சன்மானம் வழங்குவோம்.

[33168]

யாழ். செங்குந்த இந்துக்கல்லூரி

வைர விழா

இம்மாதம் நடத்த திட்டமிட்டிருந்த வைரவிழா தவிர்க்க முடியாத காரணங்களினால் ஒத்திவைக்கப் பட்டுள்ளது. விழா நடைபெறும் புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

க. சூரியகுமாரன்
(தலைவர்)

எஸ். பத்மராஜா (செயலாளர்)
ச. சிவானந்தன் (பொருளாளர்)

— பழைய மாணவர் சங்கம் —

(9/9261)

அறிவித்தல்

இத்தால் சகலரும் அறிக. 1940 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 06 திகதி பிரசித்த நொத்தாரிசு த. இராஜேஸ்வர முதலியாரால் நிறைவேற்றப்பட்ட 1545 இலக்க தர்மசாதன நன்கொடை உறுதியின் ஆதன இடாப்பில் காட்டப்பட்டுள்ள ஆதனங்களான (1) இராமலிங்கம் வீதியில் அமைந்துள்ள திருநெல்வேலி இறை திசவீரசிங்க ஆராட்சி வளவு குழி 16 1/8 (2) சட்டநாதர் வீதியில் அமைந்துள்ள மேற்படி இறை திசவீரசிங்க ஆராட்சி வளவு குழி 13 3/8 (3) அடியபாத வீதியில் அமைந்துள்ள நல்லூரிறை சிதம்பரர் வளவு குழி 3 (4) சட்டநாதர் வீதியில் அமைந்துள்ள திருநெல்வேலி இறை திசவீரசிங்க ஆராட்சி வளவு குழி 15 (5) அரசவீதியில் அமைந்துள்ள நல்லூர் இறை அரசகேசரி வளவும் மறு பிரிவுளும் நிலப்பரப்பு 8 ஆகிய மேற்கூறிய ஆதனங்கள் தர்மநம்பிக்கை ஆதனமாக இருந்து வருவதுடன், கடந்த 1992-04-24 திகதியிலிருந்து [illegible] ஒழுங்கை திருநெல்வேலி கிழக்கை சேர்ந்த ஐயாத்துரை இராசதுரை ஆகிய நான் குறித்த ஆதனங்களுக்கு சட்டப்படியான தர்மகர்த்தாவாக இருப்பதனால் மேற்குறித்த ஆதனங்கள் சம்பந்தமாக என்னைத்தவிர வேறுயாரும் செய்து கொள்ளப்படும் கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகள் சட்ட வலுவற்றது என்பதுடன் இவ்வாறான சட்ட வலுவற்ற விடயங்களால் வரக்கூடிய பொறுப்புகளுக்கு நான் பொறுப்பாளி அல்ல என வெளிப்படுத்துகிறேன்.

ஐயாத்துரை இராசதுரை

தர்மகர்த்தா < சடையம்மா சத்திரம்
ஒட்டக்கூத்தர் சத்திரம்

மேற்படி அறிவித்தல் தொடர்பாக —

பிரசித்த நொத்தாரிசு த. இராசேஸ்வர முதலியாரால் நிறைவேற்றப்பட்ட 1545 ஆம் இலக்கதர்மசாதன உறுதிப்படியும் அதில் காணப்படும் நிபந்தனைகளின் படியும் ஐயாத்துரை இராசதுரை இந்த அறிவித்தலைக் கொடுக்க உரிமை உள்ளவர் என்பதை நான் உறுதிப்படுத்துகிறேன்.

சி. வீரகத்திப்பிள்ளை LLB.
சட்டத்தரணிப் பிரசித்த நொத்தாரிசு,
132, கச்சேரி நல்லூர் வீதி,
முத்திரைச்சந்தை,
யாழ்ப்பாணம்.

(33174)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 328/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 03 - 10 - 1994 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.